DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE
C.C. No.753/2024
PROSECUTION WITNESS L.W.1/P.W.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜாகீர் உசேன் | தகப்பனார் பெயர் | சையது அமீது |
| கிராமம் | அக்ரஹாரம் | ஊர் | ஈரோடு |
| தொழில் | | வயது | |

**எதிரி ஆஜர்**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 23.07.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு, அக்ஹராத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இரும்பு கடை வைத்து நடத்தி வருகிறேன்.

2) ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. வழக்கு குறித்து எனக்கு எந்த விவரமும் தெரியாது. ஒரு வேலையாக காவல்நிலையம் சென்றபோது போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றனர். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகாரிலுள்ள கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:**

1) கடந்த 30.01.2024 ம் தேதி, பகல் 12.00மணியளவில் அசோகபுரம் விநாயகர் கோவில் அருகில் நானும் எனது நண்பர் நித்யாநந்தன் என்பவரும் சொந்த வேலையாக சென்ற போது அங்கு வந்த எதிரி மாதேஸ்வரன் என்னிடம் வந்து கேரள மாநில லாட்டரி எண்களை வெள்ளை துண்டு சீட்டில் நம்பர் எழுதி தன்னிடம் லாட்டரி வாங்கினால் உங்களுக்கு நிச்சயம் பரிசு விழும் நீங்கள் லட்சாதிபதி ஆகிவிடலாம் என் அந்த வழியாக வந்தவர்களிடம் எங்களிடமும் ஆசை வார்த்தை கூறினாரா என்றால் இல்லை.

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.07.23 17:42:10 +0530

அதற்கு நான்  இதுவரை உன்னிடம் லாட்டரி சீட்டு வாங்கியதில் ஒரு முறை கூட பரிசு விழுவில்லை பொய்யான லாட்டரி சீட்டு நம்பர்களை வெள்ளை தாளில் எழுதி கொடுத்து என்னையும் பொது மக்களையும் ஏமாற்றுகிறாய் என்று அவதை பார்த்து சத்தம் போட்டதும் எதிரி அங்கிருந்து சென்றுவிட்டாரா  என்றால் இல்லை. மேற்படி சம்பவத்திற்காக வடக்கு காவல் நிலையம் சென்று  புகார் கொடுத்து விட்டு தற்போது எதிரியை தெரியாது எனவும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் எனவும் மாற்றி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

**இல்லை.**

**மறு விசாரணை**

**இல்லை.**

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.07.23 17:42:18 +0530

Judicial Magistrate No.I,

Erode.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 753/2024

PROSECUTION WITNESS L.W.3/P.W.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரவணன் | தகப்பனார் பெயர் | பழனியப்பன் |
| கிராமம் | அம்பேத்கர் வீதி | ஊர் | ஈரோடு |
| தொழில் | | வயது | |

**எதிரி ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 23.07.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு, அம்பேத்கர் வீதியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன்.

2) என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் கையொப்பம் செய்தேன். வழக்கு குறித்து எனக்கு எந்த விவரமும் தெரியாது. **(பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.)** போலீசார் என்னை விசாரிக்கவில்லை

**அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:**

1) கடந்த 30.01.2024 ம் தேதி, மதியம் 02.00 மணிக்கு நானும் எனது நணபர் பிரபு என்பவரும் அசோகபுரம் விநாயகர் கோவில் அருகே சென்ற போது லாட்டரி சீட்டு விற்பனை செய்தது சம்மந்தமாக போலீசார் விசாரித்து மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்ததில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. பார்வை மகஜரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன் என்று மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.07.23 17:42:23 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**

**மறுவிசாரணை**

**இல்லை**

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.07.23 17:42:28 +0530

Judicial Magistrate No.I,
Erode.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.753/2024

PROSECUTION WITNESS L.W.5/P.W.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெகதீஸ் | தகப்பனார் பெயர் | வேலுச்சாமி |
| கிராமம் | அம்பேத்கர் வீதி | ஊர் | ஈரோடு |
| தொழில் | | வயது | |

**எதிரி ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 23.07.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு, அம்பேத்கர் வீதியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன்.

2) ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. நான் ஒரு நாள் காவல்நிலையம் சென்றபோது போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றனர். என்னிடம் காண்பிக்கப்படும் மாதேஸ்வரன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். **(எதிரி மாதேஸ்வரன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.3 மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இந்த வழக்கு பற்றி வேறு எந்த விவரமும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:**

1) கடந்த 30.01.2024 ம் தேதி, அசோகபுரம் ராயல் பேக்கரி அருகே நானும் எனது நண்பர் சீனிவாசன் என்பவரும் சொந்த வேலையாக சென்றோமா என்றால் இல்லை.

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.07.23 17:42:35 +0530

அப்போது வடக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் எங்களை ராயல் பேக்கரி முன்பாக லாட்டரி சீட்டு விற்பனை செய்தது சம்மந்தமாக எதிரி மாதேஸ்வரன் என்பவரை விசாரணை செய்ய இருப்பதாகவும், அதற்கு சாட்சியாக இருக்கும் படியும் கேட்டுக் கொண்டனரா என்றால் இல்லை. அப்போது குற்றத்தை ஒப்புக் கொண்ட எதிரியை எங்கள் முன்னிலையில் கைது செய்து எதிரி மாதேஸ்வரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. பதிவு செய்த வாக்குமூலத்தில் நானும், சீனிவாசன் என்பவரும் கையொப்பம் செய்தோமா என்றால் இல்லை. மாதேஸ்வரன் தானாக எடுத்து ஆஜர் செய்த வெள்ளை துண்டு சீட்டில் போலியாக பேனாவால் எழுதப்பட்ட கேரள லாட்டரி சீட்டுகளின் நம்பர் 1) KL – 8219–1, 2) KL – 7224–1, 3) KL – 9218–1, 4) KL – 6227–1, , 5) KL – 6522–1 மொத்தம் 5 சீட்டுகள் ஆகியவற்றை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றிய போது அதில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோமா என்றால் இல்லை. மேற்படி எதிரி மாதேஸ்வரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்த போதும், வழக்கு சொத்துக்களை கைப்பற்றிய போதும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக மாற்றி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

**இல்லை.**

**மறு விசாரணை**

**இல்லை.**

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2026.07.23 17:42:41 +0530

Judicial Magistrate No.I,
Erode.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.753/2024

PROSECUTION WITNESS L.W.6/P.W.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சீனிவாசன் | தகப்பனார் பெயர் | ராமசாமி |
| கிராமம் | அம்பேத்கர் வீதி | ஊர் | ஈரோடு |
| தொழில் | | வயது | |

**எதிரி ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 23.07.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு, அம்பேத்கர் வீதியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன்.

2) ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. நான் ஒரு நாள் காவல்நிலையம் சென்றபோது போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றனர். என்னிடம் காண்பிக்கப்படும் மாதேஸ்வரன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். **(எதிரி மாதேஸ்வரன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.5 மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இந்த வழக்கு பற்றி வேறு எந்த விவரமும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:**

1) கடந்த 30.01.2024 ம் தேதி, அசோகபுரம் ராயல் பேக்கரி அருகே நானும் எனது நண்பர் ஜெகதீஸ் என்பவரும் சொந்த வேலையாக சென்றோமா என்றால் இல்லை. அப்போது வடக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் எங்களை ராயல் பேக்கரி முன்பாக

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.07.23 17:42:46 +0530

லாட்டரி சீட்டு விற்பனை செய்தது சம்மந்தமாக எதிரி மாதேஸ்வரன் என்பவரை விசாரணை செய்ய இருப்பதாகவும், அதற்கு சாட்சியாக இருக்கும் படியும் கேட்டுக் கொண்டனரா என்றால் இல்லை. அப்போது குற்றத்தை ஒப்புக் கொண்ட எதிரியை எங்கள் முன்னிலையில் கைது செய்து எதிரி மாதேஸ்வரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. பதிவு செய்த வாக்குமூலத்தில் நானும், ஜெகதீஸ் என்பவரும் கையொப்பம் செய்தோமா என்றால் இல்லை. மாதேஸ்வரன் தானாக எடுத்து ஆஜர் செய்த வெள்ளை துண்டு சீட்டில் போலியாக பேனாவால் எழுதப்பட்ட கேரள லாட்டரி சீட்டுகளின் நம்பர் 1) KL – 8219–1, 2) KL – 7224–1, 3) KL – 9218–1, 4) KL – 6227–1, , 5) KL – 6522–1 மொத்தம் 5 சீட்டுகள் ஆகியவற்றை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றிய போது அதில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோமா என்றால் இல்லை. மேற்படி எதிரி மாதேஸ்வரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்த போதும், வழக்கு சொத்துக்களை கைப்பற்றிய போதும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக மாற்றி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**
**இல்லை.**
**மறு விசாரணை**
**இல்லை.**

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2026.07.23 17:42:53 +0530

Judicial Magistrate No.I,
Erode.